பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். பெத்தடீன் போட்டுக்கொள்வதால் அவர்கள் சீராகச் செயல்பட முடியாத நிலைமைதான் ஏற்படும் என்பதால் அந்தந்த இலாக்காவில் உள்ள மேலதிகாரிகள் அவர்களுக்கு அறிவுரை கூறி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஹிப்பீஸ் போன்றவர்கள் போதைதரும் மருந்துகளை விற்பனை செய்கிறார்கள். அவர்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலைமை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படி வந்திருந்தால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹிப்பீஸ் பற்றி தெரிவித்திருக்கும் கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் எறத்தாழ ஹிப்பீஸ் செல்வாக்கு வேரூன்றவில்லை. அவர்களுடைய செல்வாக்கு இங்கே ஏற்படாத அளவுக்கு நம்முடைய தமிழகத்தின் பண்பாடு நம்மைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன். எனவே, அதன் தொடர் விளைவுகளும் தமிழகத்தில் குறைவாகத் தான் இருக்கும் என்று நம்புகிறேன்.

கடற்பகுதிகளில் மீன் பிடித்தல் குறித்த ஆய்வு.

*13. **வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நமது கடலில் எந்தெந்த இடத்தில் எந்தெந்த ரகமான மீன்கள் இருக்கின்றன என்பது பற்றி சர்வே செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம். நமது கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி சுற்றாய் வினால் கிடைத்த விவரங்கள் பின்வருமாறு—

பொதுவாக கிழக்குக் கடற்கரையையொட்டி கீழ்க்கண்ட வாணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

1973 ஆகஸ்ட் 4]

(1) காறல், (2) பன்னு, கூரல், (3) சாவாளே, (4) நகரை, செண்டைல், (5) துமிளி, (6) உளுவை, (7) திருக்கை, (8) சுறு, (9) நாக்கு, (10) வாவல், (11) வஞ்சிரம், (12) நண்டு, (13) இருல். மற்றும் தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட பகுதிகளில் முக்கியமாகக் கிடைக்கும் மீன் இனங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

இடத்தின் பெயர்.	பிடிபடும் மீன் இனங்கள்.
(1) மன்னுர் வளேகுடா	ஆழ்கடல் இருல். ஆழ்கடல் சிங்கி இருல்.
(2) மண்டபம், இராமேஸ்வரம்	காரல், கெளித்தி, சுதும்பு, இருல்.
(3) கன்னியாகுமரி	சிங்கி இருல்.
(4) வாட்ஜ்பேங்க்	பார்மீன்கள் எனப்படும் குருவிலி, செப்பிலி.
(5) எண்ணூர், பழவேற்காடு	இருல்.

புதுரக மீன்பிடி வலேகள்

*14. வினு—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் கயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாள் ஒன்றுக்கு 50 டன் வீதம் மீன் பிடிக்க வல்ல பர்சின் வலேகளே அண்மையில் மண்டபத்தில் பரிக்ஷித்துப் பார்க்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அந்த வலேயை உபயோகிக்க அரசு திட்ட மிட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மண்டபம் மீன்துறை படகு கட்டும் நிலேயத்தில் இவ் வலேயை உபயோகிக்கப்பதற்கான வசதிகள் கொண்ட 50 அடி நீளமுடைய விசைப்படகொன்று (Combination Type) கட்டப்பட்டு வருகிறது. இப் படகு கட்டி பூர்த்தியானவுடன் "பர்சின்" வலே உபயோகிப்பது பற்றிய பரிசோதனேகள் தொடர்ந்து நடத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நம்முடைய தமிழகத்தில் நீண்ட கடற்கரை இருந்தும் மீன்பிடித் தொழில் வளர்ச்சிபெற வில்லே. காரணம் பலயிடங்களில் இந்தத் தொழில் அபிவிருத்தி